# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 10/2020** **Date:04.11.2025**

**(PW2)- அருள் ராஜ்**

**1**ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. 1ம் பிரதிவாதி எப்போதும் எனக்கு தனியாக சிறப்பு திருப்பலி நிறைவேற்றி எனது பேத்திக்கு திருமுழுக்கு நிறைவேற்றி தருவதாக உறுதி கூறவில்லையென்று சொன்னால் சரியல்ல, உறுதியளித்தார். மேற்படி விவரத்தை எனது பிராதிலோ, என்னுயைட நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். பொதுவாக ஆலயங்களில் கிறிஸ்துமஸ் , உயிர்ப்பு தினத்தன்று திருமுழுக்கு வழங்குவது வழக்கம் என்றால் சரியல்ல, மற்ற நாட்களிலும் வழங்குவார்கள். மற்ற நாட்களிலும் வழங்குவார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அபிஷேக் என்ற குழந்தைக்கு 24.12.2018 தேதியில் கிறிஸ்துமஸ் திருப்பலியின் போது திருமுழுக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பிவாசாஆ**. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே போல் 24.12.2019 தேதியிலும் மற்றும் 4 குழந்தைக்கும் கிறிஸ்துமஸ் திருப்பலியின் போது திருமுழுக்கு வழங்கப்பட்டது என்றால் என்றால் சரிதான். மேற்படி தேதியில் திருமுழுக்கு நடைபெற்றதை காட்டக்கூடிய ஆவணங்கள் பிவாசாஆ. 4 முதல் பிவாசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 24.12.2020 தேதியிலும் 3 குழந்தைகளுக்கு திருமுழுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி 2018 ற்கு முன்பும் , 2020 ற்கு பின்பும் கிறிஸ்துமஸ் திருப்பலியின் போது திருமுழுக்கு வழங்கப்படவில்லை . மேற்படி

ஆவணங்கள் பிவாசாஆ. **7** முதல் பிவாசாஆ **9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2018 ற்கு முன்பும் , 2020 ற்கு பின்பும் கிறிஸ்துமஸ் திருப்பலியின் போது திருமுழுக்கு வழங்கப்படவில்லையென்று எனது பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லையென்றால் சரிதான், அதற்கு அவசியமில்லை. பிவாசாஆ. 2 ஆவணத்தில் Statues of the Diocese of Kulithurai என்பதன் தமிழாக்கம் குழித்துறை மறைமாவட்டத்தின் சட்டங்கள் என்றால் சரியல்ல. குழித்துறை மறைமாவட்டத்திற்கென்று தனியாக விதிமுறைகள் உண்டு என்றாலும் என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி விதிமுறை புத்தகம் என்றாலும் சரிதான். மேற்படி ஆவணம் பிவாசாஆ. **10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. என்னிடம் காட்டப்படும் குழித்துறை மறைமாவட்டத்தின் சட்டம் பிரிவு 224 பற்றிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் , ஆனால் அது சித்தன்தோப்பு ஆலயத்திற்கு பொருந்தாது. மேற்படி பிரிவு சித்தன்தோப்பு ஆலயத்திற்கு பொருந்தாது என்று எந்த சட்ட விதிமுறைகளிலும் குறிப்பிடவில்லையென்றால் சரிதான், ஆனால் அது நடைமுறையில் உள்ளது. இந்த வழக்கில் நான் வழக்கறிவிப்பு அனுப்பிய போது ரூ. 6,50,000 இழப்பீடு கேட்டு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். எனது மகனின் மாத வருமானம் எவ்வளவு என்றால் தற்போது சுமார் ஒரு இலட்சம் இருக்கும்.

5. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 2 ல் குறிப்பிட்டுள்ள என்னுடைய தகுதிகள் என்னுடைய பேத்திக்கு திருமுழுக்கு வழங்குவதற்கான சிறப்பு தகுதி கிடையாது என்றால் சரிதான். நான் 2ம் பிரதிவாதியிடமிருந்து என்னுடைய பேத்திக்கு திருமுழுக்கு பெற உத்தரவு எதுவும் பெற்று வந்தேனா என்றால் பரிந்துரை கடிதம் பெற்றேன். ஒரு நிர்வாக பொறுப்பில் உள்ள ஒரு நபர் பரிந்துரைத்தால் அதை

கட்டாயமாக்க நிறைவேற்ற வேண்டும் கட்டாயம் 1ம் பிரதிவாதிக்கு கிடையாது என்றால் அதை பற்றி 2,3 பிரதிவாதிகள் தான் தெரிவிக்க வேண்டும்.

6. தனிநபர் விரும்பிய நாட்களில் சம்பந்தப்பட்ட ஆலயத்தில் திருமுழுக்கு கொடுக்காத பட்சத்தில் ஆலய பங்கு குருவிடம் அல்லது ஆயரிடம் உரிய அனுமதி பெற்று திருமுழுக்கு நடத்தலாம் என்றால் சரிதான், ஆனால் ஆலய பங்கு குருவிடமும் மறைமாவட்ட நிர்வாகத்திடமும் அனுமதி பெற வேண்டும் . சுங்கான் கடை தூய அந்தோணியார் ஆலய திருத்தலத்தில் வைத்து நான் குறிப்பிட்ட தேதியில் எனது பேத்திக்கு அருட்தந்தையர்கள் ஏசுமரியான், மைக்கேல் அலோசியஸ் , இன்னாசியர் ஆகிய மூவரும் திருப்பலி நிறைவேற்றி திருமுழுக்கு வழங்கினார்கள் என்றால் சரிதான்.

7. எனது பேத்திக்கு திருமுழுக்கு கொடுப்பது சம்பந்தமாக பங்கு பேரவையில் எந்த தீர்மானமும் போடவில்லையென்றால் சரியல்ல, தீர்மானம் போடப்பட்டுள்ளது. தீர்மானம் போடப்பட்டுள்ளது என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் அவ்வாறு தீர்மானம் இருந்தால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல, தாக்கல் செய்யலாம். திருமுழுக்கு சடங்கு சம்பந்தமாக எவ்வளவு தொகை செலவானது என்ற கணக்கு விவர பட்டியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள திருமுழுக்கு சடங்கு சம்பந்தமான செலவுகளுக்கான ரசீதுகளும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் தாக்கல் செய்யவில்லை.

8. பல இலட்சம் ரூபாய் திருமுழுக்கு சடங்கிற்கு செலவானது என்று வழதக்கிற்காக பொய்யாக குறிப்பிடப்பட்டுளது என்றாலும் அவ்வாறு எந்த செலவும் ஏற்படவில்லையன்றாலும் சரியல்ல, ஆனால் செலவை விட எனக்கும் எனது

குடும்பத்தாருக்கும் ஏற்பட்ட அவமானமும் மன உளைச்சலும் அதிகமாகும். பிராதில் எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் ஏற்பட்ட அவமானத்திற்கும் மன உளைச்சலுக்கும் சேர்த்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல. எனது பேத்திக்கு திருமுழுக்கு கொடுக்கும் போது நான் பங்கு அருட்பணி பேரவையில் துணை தலைவராக இருந்தேன் என்றாலும் நான் நினைத்தது போல் நினைத்த தேதியில் எனது விருப்பம் போல் எனது குடும்பத்தாருக்கு மட்டும் தனியாக எனது பேத்திக்கு திருமுழுக்கு கொடுக்க முடியவில்லையே என்ற அகந்தையினால் வேண்டுமென்றே 1ம் பிரதிவாதியை கஷ்டபடுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்ய உறுதுணையாக இருந்ததோடு இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

2,3 பிரதிவாதிகள் மேற்படி குறுக்கு விசாரணையை தங்களது குறுக்கு விசாரணையாக adopt செய்திருக்கிறார்கள்.